# ஸித்தித்ரயத்தின் உட்பொருள்

ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே திருநாங்கூர்
ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

மாநத்வம் ப$_4$க$_3$வந்-மதஸ்ய மஹத : பும்ஸஸ்தத$_2$ா நிர்ணய :
திஸ்ரஸ்ஸித்$_3$த$_4$ய ஆத்மஸம்வித$_3$கி$_2$லாதீ$_4$ஶாநதத்த்வாஶ்ரயா :|
கீ$_3$தார்த்த$_2$ஸ்ய ச ஸங்க்$_3$ரஹ : ஸ்துதியுக$_3$ம் ஸ்ரீஸ்ரீஶயோரித்யமூந்
யத்$_3$க்$_3$ரந்த$_2$ாநநுஸந்த$_3$தே$_4$ யதிபதிஸ்தம் யாமுநேயம் நும :||

(ஆகம ப்ராமாண்யம் , மஹாபுருஷ நிர்ணயம் , ஆத்ம , ஈஶ்வர , ஸம்வித்ஸித்திகள் , கீதார்த்த ஸங்கரஹம் , சது : ஶ்லோகீ , ஸ்தோத்ரரத்நம் என்கிற க்ரந்தங்கள் எந்த ஆசார்யரால் அருளிச்செய்யப்பட்டதாக ஸ்ரீபாஷ்யகாரர் அநுஸந்திக்கிறுரோ , பரமாசார்யராய் விளங்கும் அந்த ஸ்ரீஆளவந்தாரை துதிக்கின்றேம்)

இது ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷையின் ஆரம்பத்தில் ஸ்ரீவேதாந்ததேஶிகன் அநுஸந்தித்த ஶ்லோகமாகும். தற்சமயம் நமக்குக் கிடைத்திருக்கும் நம் பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த க்ரந்தங்களில் முதன்மை பெற்று விளங்குபவை பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்தவைகளே! ஸ்ரீமந்நாதமுநிகள் அருளிச்செய்த ந்யாய தத்த்வம் , யோகரஹஸ்யம் என்கிற க்ரந்தங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்துள்ள மஹாபுருஷ நிர்ணயமும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனுல் பூர்வர்கள் இந்த க்ரந்தங்களில் கண்ட விஷயங்களை கையாண்டிருக்கிறுர்கள் என்பது திண்ணம். ஆகமப்ராமாண்யம் ஸ்ரீபகவச்சாஸ்த்ரம் எனப்படும் ஸ்ரீபாஞ்சராத்ரத்தின் ப்ராமாண்யத்தை பஹுமுகமாக நிலைநாட்டுகிறது. வேதம்போலே ஸ்ரீபாஞ்சராத்ரமும் ப்ரபல ப்ரமாணம் என்று பரமாசார்யர் இதில் மூதலித்துப் போந்தார்.

ஸ்ரீபாஷ்யகாரர் உத்பத்த்யஸம்பவாதிகரணத்திலே(2-2-8) இதை அடியொற்றியே ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமப்ராமாண்யத்தை ஸ்ரீவ்யாஸ ஸித்தாந்தமாக நிர்ணயித்தருளினுர். நம்மாழ்வாரால் மயர்வறமதிநலம் அருளப்பெற்றவரான ஸ்ரீமந்நாதமுநிகளின் உபதேஶ பரம்பராப்ராப்தமான ஸ்ரீகீதையின் அர்த்தங்களை ஸங்க்ரஹித்து கீதார்த்த ஸங்க்ரஹம் என்னும் க்ரந்தத்தை அருளிச்செய்தார் பரமாசார்யர். அதைத் தழுவியே நம் ஸ்வாமி எம்பெருமானுர் *மாயன்அன்றுஐவர் தெய்வத்தேரினில் செப்பிய கீதையின் செம்மைப் பொருள் தெரியப் பாரினில் சொன்னுர்.. (இராமானுச நூற்றந்தாதி 68) சது : ஶ்லோகீ, ஸ்தோத்ரரத்நம் இவைகளை அடியொற்றியே ஸ்வாமி எம்பெருமானுர் கத்யங்களை அருளிச்செய்தார்.

http://acharya.org

ஸித்தித்ரயத்தை ஆதாரமாகக் கொண்டே நம் ஸ்வாமி ஸ்ரீபாஷ்யத்தில் மஹாஸித்தாந்தத்திலும் மற்ற இடங்களிலும் அநேக அர்த்தவிசேஷங்களை நிர்ணயித்தருளினர். ஜகதாசார்யரான எம்பெருமானாருக்கும் பரமாசார்யராய், விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபநத்திலே அவருக்கு வழிகாட்டியாய் விளங்கும் மஹாக்ரந்தங்களை அருளிச்செய்தவரான ஸ்ரீஆளவந்தாருடைய பெருமை வாசாம்-அகோசரம் என்பதை நாம் அறியலாம். இனி பெரியோர்களின் நியமநடியாக ஸித்தித்ரயத்தின் உட்பொருளைச் சுருக்கமாகவும் ஸாரமாகவும் விண்ணப்பிக்கிறேன்.

ஸித்தி என்பது தத்த்வ நிர்ணயத்தைக் குறிக்கும். ஜீவாத்மா, பரமாத்மா, பகுத்தறிவதற்குரிய ஸாதநமான ப்ரமாண ஜ்ஞாநம் ஆகிய இம்மூன்றைப் பற்றிய உண்மைகளை நிர்ணயித்துத் தருவதால் ஆத்மஸித்தி, ஈச்வரஸித்தி, ஸம்வித்ஸித்தி என்று நூல்களுக்குத் திருநாமங்கள் அமைந்தன. இவற்றுள் முதலில் ஸம்வித்ஸித்தியையும், பிறகு ஆத்மஸித்தியையும், அதற்குப் பிறகு ஈச்வரஸித்தியையும் அருளிச்செய்தார் என்று ஊஹிக்க இடமுண்டு. ஆத்மஸித்தியில் ஸம்வித்ஸித்தியையும் ஈச்வரஸித்தியில ஆத்மஸித்தியையும் ப்ரஸ்தாபித்திருப்பதை நாம் காணலாம். ஸம்வித்ஸித்தியில் முதலிலும் நடுவிலும் கடைசியிலும் அநேக பாகங்கள் லுப்தமாயின. மற்ற இரு ஸித்திகளிலும் கடைசி பாகம் லுப்தம். மீமாம்ஸகரான குமாரிலபட்டரால் செய்யப்பட்ட ச்லோகவார்த்திகம் போலே ஸம்வித்ஸித்தியும் ச்லோகங்களாலேயே செய்யப்பட்டிருக்கிறது. மற்ற ஸித்திகள் இரண்டும் கத்யரூபமாய் அமைந்திருக்கின்றன.

ப்ரமாணங்களைக் கொண்டே பொருள்களின் உண்மைநிலையை அறியவேண்டும் என்பது நூல்களில் கண்ட விதியாகும். அதன்படி ஸம்வித்ஸித்தியில் ப்ரமாண நிஷ்கர்ஷத்தையும் மற்ற இரு ஸித்திகளில் ப்ரமேய நிஷ்கர்ஷத்தையும் செய்தருளுகிறார் எனவும் கொள்ளலாம். பரமவைதிகரான பரமாசார்யர் வேதத்தையே முக்ய ப்ரமாணமாகக் கொண்டவர். ஆயினும் குதர்க்க-வாதிகளை நிரஸிப்பதற்கு ஸத்தர்க்கங்களையே முக்ய கருவியாகக் கொண்டு ஸித்தித்ரயத்தில் புறச்சமயவாதிகளை வாதப்போரில் தோற்கடித்து அநாதியானதும் பரம வைதிகமானதுமான ஸித்தாந்தத்தை நிலைநாட்டியருளினர். எனவே ஸித்தித்ரயம் ஸ்ரீஆளவந்தாருடைய வெற்றிக்கொடி எனப் போற்றப்படுகிறது. ஆத்மஸித்தியின் ஆரம்பத்தில் பரமாசார்யர் க்ரந்தம் இயற்றப் போதுமான காரணத்தை —

விருத்$_3$த$_4$மதயோSநேகாஸ் ஸந்தயாத்ம பரமாத்மநோ: |
அதஸ் தத்பரிசுத்$_3$த$_4$யர்த்த$_2$ம் ஆத்மஸித்$_3$தி$_4$ர் விதீ$_4$யதே ||

(ஆத்மபரமாத்மாக்களுடைய தத்த்வஜ்ஞாநம் முக்திக்கு இன்றியமையாத ஸாதநம் என்று வேதமும் வேதார்த்தத்தை உணர்ந்த பெரியோர்களுடைய நூல்களும் பறைசாற்றுகின்றன.

http://acharya.org

இவ்விரு ஜ்ஞாநத்திலும் புறவாதிகளுடைய துர்வாதங்களால் தத்த்வத்தை உள்ளபடி அறிந்து உஜ்ஜீவிப்பதற்கு உறுப்பாக ஆத்மஸித்தி செய்யப்படுகிறது) என்று அருளிச்செய்கிறார்.

## ஆத்மஸித்தியின் உட்பொருள்

*நான்* *நான்* என்று தனக்குத்தானே எப்போதும் தோற்றும் ஆத்மவிஷயத்திலே, *தேஹமே ஜீவன்* என்றும், *புலன்களே ஜீவன்* என்றும், *மனமே ஜீவன்* என்றும், *ப்ராணனே ஜீவன்* என்றும், *புத்தியே ஜீவன்* என்றும் சொல்கிற புறவாதிகளுடைய வாதங்களைக் கண்டித்து, *ஜீவாத்ம ஸ்வரூபம் இவற்றைக் காட்டிலும் வேறுபட்டதாய் இருக்கும்; அதுதான் ஜ்ஞாந-ஆஶ்ரயமாய், நித்யமாய், அணுவாய், அநேகமாய் இருக்கிறது; இப்படியிருக்கும் ஆத்மஸ்வரூபம் ஸ்வதந்த்ரம் அன்று; அது எப்போதும் பரமாத்மாவுக்கு ஶரீரமாய், பரதந்த்ரமாய் இருக்கும்* என்று ஆத்மஸ்வரூப யாதாத்ம்யத்தை நிஷ்கர்ஷிக்கிறார் ஆத்மஸித்தியில்.

**தே$_3$ஹேந்த்$_3$ரிய மந: ப்ராண தீ$_4$ப்$_4$யோSந்யோSநந்யஸாத$_4$ந:|**
**நித்யோ வ்யாபீ ப்ரதிக்ஷேத்ரமாத்மா பி$_4$ந்ந: ஸ்வத: ஸுகீ$_2$||**

(தேஹம் இந்த்ரியம் மனஸ் ப்ராணன் புத்தி ஆகியவற்றைக் காட்டிலும் ஆத்மா வேறானவன். இன்னொரு ஜ்ஞாநத்தால் அறியத் தேவையில்லாதபடி தானே *நான்* *நான்* என்று தோற்றக்கூடிய ஸ்வயம்ப்ரகாஶ வஸ்து. நித்யன். ஶரீரம் முழுவதும் தன்னுடைய ஜ்ஞாநத்தால் பரவி இருப்பவன். ஒவ்வொரு ஶரீரத்திலும் தனித்தனியாக இருப்பவன். இயற்கையில் ஸுகியானவன்) என்கிற ஶ்லோகத்தில் ஆத்மாவின் உண்மையான தன்மையைச் சுருங்கச் சொல்லி, மேலே யுக்திகளாலே விளக்கியருளுகிறார். இந்த ஶ்லோகத்தில் இருக்கும் *வ்யாபீ* என்கிற பதத்திற்கு *எல்லா அசேதநங்களுக்குள்ளும் இருக்கத்தக்கவன்; அணுவைப் போன்று ஸூக்ஷ்மன்* என்று பொருள் உரைத்தார் ஸ்ரீபாஷ்யகாரர். *கரந்தசிலிடந்தொறும் இடம்திகழ்பொருள்தொறும்* (1-1-10) என்கிற நம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்தியைக் கொண்டு இப்படி அருளிச்செய்தபடி. எனவே ஜீவாத்மா ஸ்வரூபத்தால் விபுவாய் இருப்பவன் என்று ப்ரமிக்க இடமில்லை.

தைத்திரீயோபநிஷத்தில் அந்நமய ப்ராணமய மநோமயங்களுக்கு அவ்வருகே ஶரீரம், ப்ராணன், மனம் இவற்றைக் காட்டிலும் வேறுபட்டிருக்கிற ஜீவாத்மாவை *விஜ்ஞாநமய:* என்று குறிப்பிட்டிருக்கிறது. *அறிவு நிறைந்தவன்* என்றபடி. உணர்வற்ற பொருள்களைக் காட்டிலும் ஆத்மாவுக்குண்டான வாசியை வேதபுருஷன் *விஜ்ஞாநமயன்*

http://acharya.org

என்னும் சொல்லால் காட்டினுன். நம்மாழ்வார் —

*சென்றுசென்றுபரம்பரமாய்*(8-8-5)
*என் ஊனில்உயிரில்உணர்வினில்
நின்றவொன்றைஉணர்ந்தேனே*(8-8-4)

என்று இந்த ஆத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்தார். ஸ்ரீஆளவந்தார் ஆத்மஸித்தியில் இதனை நிலைநாட்டுகிருர்.

மாயாவாதிகள் *அறிவே ப்ரஹ்மம்; அதைத்தவிர வேறொரு பொருள் எதுவுமில்லை. ப்ரஹ்மம் அவித்யையால் லோகத்தில் காணப்படும் நாநாவித பதார்த்தங்களாகத் தோற்றுகிறது* என்கிருர்கள். இந்த வாதத்தை ஆத்மஸித்தியில் கண்டிக்கிருர். எங்ஙனேயென்னில், *நான் அறிகிறேன்* என்றே எல்லாரும் தங்களை அறிவுள்ள்வர்களாக அநுபவிக்கிருர்கள். ஆகையால் இந்த மாயாவாதம் லோகாநுபவத்துக்கு முரண்படுகிறது. *ஜாநாத்யேவாயம் புருஷ:* என்றும், *ய: ஸர்வஜ்ஞ:ஸர்வவித்*என்றும் அறிவுள்ளவர்களாகவே ஆத்மாவையும் பரமாத்மாவையும் வேதம் கூறுகிறது என்பதால் ஶாஸ்த்ர விரோதம் என்னும் தோஷமும் அத்வைதிகளுடைய பக்ஷத்திற்கு ஸித்திக்கிறது என்கிருர். ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்று என்பதும் பொருந்தாது. ஜீவன் ஸம்ஸரிக்கக் கூடியவன். ப்ரஹ்மம் ஸம்ஸார ஸம்பந்தம் இல்லாதது. ப்ரஹ்மமே அவித்யையால் தன்னை ஸம்ஸாரியாக ப்ரமிக்கிறது என்கிற வாதம் பரிஹஸிக்கத்தக்கது என்கிருர்.

ஜீவாத்மாவின் நிலைநின்ற ஆகாரத்தை *ஸ்வத: ஸுகீ* என்று குறிப்பிடுகிருர். பகவத்குணுநுபவத்தைப் பண்ணி *உகந்து பணிசெய்து களித்திருப்பதுதான் ஆத்மாவின் உண்மையான நிலை. ஸம்ஸார ஸுகது:க்கங்கள் அநாதிகாலமாகப் பண்ணிய கர்மத்திஞல் வருபவை. பகவானை ஶரணமடைந்து அவனுடைய அநுக்ரஹத்திஞல் இவனுக்கு கர்மபந்தம் விடுபட்டால் *ஸ்வத: ஸுகீ* என்னும் நிலை ஶாஶ்வதமாக ஸித்திக்கும் என்று ஆத்மஸித்தியில் நிரூபிக்கிருர்.

ஸ்வாமி எம்பெருமாஞர் யஜ்ஞமூர்த்தி என்னும் மஹாமேதாவியான மாயாவாதியோடு வாதப்போர் நடத்துகையில் 17-வது நாள் வாதத்தின் இறுதியில் அவன் சொன்ன யுக்திகளுக்கு மேல் கோடி தோன்ருமல் திகைத்திருக்க, அன்றிரவு ஸ்வப்நத்தில் பேரருளாளப் பெருமாள் இவருக்கு ஆளவந்தார் ஆத்மஸித்தியில் செய்தருளிய மாயாவாத நிரஸந ப்ரகாரங்களை காட்டியருள, இவரும் தெளிந்தெழுந்து, ப்ராத:கால அநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, மிகவும் ஸந்துஷ்டராய் கம்பீரமாக வாதஸதஸ்ஸுக்கு எழுந்தருள, பேரருளாளனுடைய

அநுக்ரஹத்தைப் பரிபூர்ணமாகப் பெற்ற இவருடைய தேஜஸ்ஸுக்குத் தோற்று வாதம் புரியாமல் அந்த வாதி அவர் திருவடிகளிலே சடக்கென ஶரணம் அடைந்தான். நம் ஸ்வாமியும் மஹா மேதாவியான அவரைத் தமக்கு ஶிஷ்யனாக்கிக் கொண்டு, *அருளாளப்பெருமாள் எம்பெருமானார்* என்று அவருக்குத் திருநாமம் சாற்றி அவருடன் கூடியிருந்தே தர்ஶநத்தை நிர்வஹித்துக் கொண்டு போந்தார். குருபரம்பரையிலுள்ள இவ்வரலாற்றைச் சிந்தித்துப் பார்த்தால் விவேகிகளுக்கு ஸ்ரீஆளவந்தாருடைய ஸ்ரீஸூக்திகளின் வீறுடைமை நன்கு விளங்கும்.

## ஈஶ்வர ஸித்தியின் உட்பொருள்

வேதத்தைப் ப்ரமாணமாக ஒத்துக்கொண்டும் வேதவேத்யனான பரமபுருஷனை ஒத்துக் கொள்ளாமல், *யாகாதி கர்மங்களே அபூர்வத்தை உண்டு பண்ணி அதன் வழியாக ஸ்வர்க்கம் முதலான பலங்களைத் தருகின்றன* என்று நிரீஶ்வர-வாதம் செய்யும் கர்மமீமாம்ஸகர் கூறும் கூற்றைத் தகர்த்து, *ப்ரளய காலத்தில் அழிந்து கிடந்த எல்லா லோகங்களையும் மறுபடியும் ஸ்ருஷ்டி காலத்தில் படைத்துக் காத்தருளும் ஸர்வேஶ்வரன் ஒருவன் உளன்* என்று ஶ்ருதி கூறுநிற்கச் செய்தே நிரீஶ்வரவாதம் பண்ணும் இவர்களை ஆஸ்திக நாஸ்திகர்கள் என்கிறார். மேலும், *எவனுடைய திருவாராதநமாக யாகாதிகள் ஶாஸ்த்ரத்தினால் விதிக்கப்படுகின்றனவோ, யாகாதிகளால் ஆராதிக்கப்பட்ட எவனுடைய அநுக்ரஹத்தினாலேயே பலத்தை அவரவர் அடைகின்றனரோ, அந்தப் பரமன் இல்லாதபோது கர்மமும் கர்ம பலனும் ஸித்திக்காது* என்கிறார். மேலும்,

*அழிந்து கிடந்த வஸ்துவுக்கு நாமரூபங்கள் உண்டாவதற்கும் ஒரு விதாதா வேணும். ஆகவே ஜகத்-ஸ்ரஷ்டாவாய், ஸர்வகர்மஸமாராத்யனாய், ஸர்வபலப்ரதனான பரமபுருஷனை ஶாஸ்த்ரம் காட்டும் வழியாலே அவஶ்யம் அங்கீகரித்தே ஆகவேண்டும்* என்று யுக்திகளாலே நிரூபித்து, *கருமமும் கருமபலனுமாகிய காரணம் தன்னை* என்று ஆழ்வார் பேணின காரணமான பரம்பொருளை ஈஶ்வரஸித்தியில் நிலைநாட்டுகிறார் பரமாசார்யர். ஈஶ்வரஸித்தியின் இறுதியில்,

ஏகப்ரத$_4$ாநபுருஷம் விவாத$_3$ாத்$_4$யாஸிதம் ஜக$_3$த் |
சேதநாசேதநாத்மத்வாத் ஏகராஜகதே$_3$ஶவத் ||

என்னும் ஶ்லோகத்தில், *உபயவிபூதியிலும் உள்ள ஜீவராசிகளும் அதிகாரி வர்க்கமான வானவர்களும் ராஜாதிராஜனான ஸ்ரீமந்நாராயணனுடைய செங்கோலின் கீழ் இடரின்றி வாழ்கின்றனர்* என்னும் வேதாந்த ஸித்தாந்தத்தை ராஜ-ராஷ்ட்ர-த்ருஷ்டாந்தத்தினால் விளக்குகிறார். *வேதைகவேத்யன் பரமபுருஷன்* என்பதே இவர் திருவுள்ளம். ஆயினும்

http://acharya.org

வேதார்த்த நிர்ணய ஸஹகாரியான தர்க்கங்களையே ஈஶ்வர ஸித்தியில் முக்யமாகக் காட்டியருளுகிறார் .

## ஸம்வித்ஸித்தியின் உட்பொருள்

ஸம்வித்ஸித்தியில் முக்யமாக கேவலாத்வைத வாதத்தை நிரஸநம் பண்ணி விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைப் பரமாசார்யர் நிலைநாட்டுகிறார் . *ஸத்தான (உளதான) பொருள் ஒன்றே ; அநேகமில்லை* என்னும் வாதத்தையும் , *ஜ்ஞாநம்(அறிவு) ஒன்றே உள்ளது ; ஜ்ஞேயமும் (அறியப்படும் பொருளும்) ஜ்ஞாதாவும் (அறிகிறவனும்) இல்லை* என்னும் வாதத்தையும் கண்டித்து , *சித் , அசித் , ஈஶ்வரன் என்கிற மூன்றும் தத்த்வங்கள் (உண்மைப் பொருள்கள்) ; அப்படியே ஜ்ஞாநம் , ஜ்ஞேயம் , ஜ்ஞாதா என்கிற மூன்றும் உள்ளன* என்று நிரூபிக்கிறார்.

மேலும் *ஏகமேவாத்$_3$விதீயம்* (சாந்தோக்யம் 6-2-1) என்கிற ஶ்ருதி வசநத்துக்கு , *பரம் பொருளுக்கு குணம் , ரூபம் , ஐஶ்வர்யம் , ஒன்றுமில்லை* என்னும் அபத்தப் பொருளை உரைத்தனர் அத்வைதிகள் . அவர்கள் கூறும் கூற்றைத் தகர்த்து , *பரம்பொருளான எம்பெருமானுக்கு நற்குணங்களும் , திவ்யரூபங்களும் , வைபவங்களும் பலபலவுண்டு* என்று நிரூபிக்கிறார்.

*ஸத்யம் ஜ்ஞாநம்-அநந்தம் ப்$_3$ரஹ்ம*
(தை-ஆந 1-2)(விகாரம் அற்றிருப்பதால் ஸத்யமாகவும் , ஜ்ஞாநமாகவும் , அளவற்றதாய் இருப்பதால் அநந்தமாயும் இருக்கும் ப்ரஹ்மம்)

*பராSஸ்ய ஶக்திர் விவிதை$_4$வ ஶ்ரூயதே ஸ்வாப$_4$ாவிகீ ஜ்ஞாநப$_3$லக்ரியா ச*
[ஶ்வே-6] [இந்தப் பரமாத்மாவுக்குப் பலபடிப்பட்டதும் மேலானதுமான ஶக்தியும் இயற்கையான ஜ்ஞாநமும் பலமும் (ஸ்ருஷ்டித்தல் முதலான) கார்யங்களும் உண்டு என்று அறியப்படுகிறது]

*க$_3$ந்த$_4$ர்வாப்ஸரஸஸ் ஸித்$_3$த$_4$ாஸ் ஸகிந்நரமஹோரக$_3$ா : |
நாந்தம் கு$_3$ணாநாம் க$_3$ச்ச$_2$ந்தி தேநாநந்தே$_3$ாSயமுச்யதே ||
[கந்தர்வர்களும் , அப்ஸரஸ்ஸுகளும் , கிந்நரர்களுடனும் மஹாநாகங்களுடனும் கூடிய ஸித்தர்களும் (இவனுடைய) குணங்களின் எல்லையை அடைவதில்லை ; ஆகையால் இவன் *அநந்தன்* என்று சொல்லப்படுகிறான்]

இத்யாதி ப்ரமாண வசநங்களால் எம்பெருமான் எல்லையில்லாத நற்குணங்களையும் வைபவங்

http://acharya.org

களையும் உடையவன் என்று விளங்குகிறது. எம்பெருமான் ஒருவனே ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனாய், தானே எல்லாருக்கும் ப்ரதாநனாய் இருக்கிறான் என்கிற பொருளே *ஏகமேவாத்$_3$விதீயம்* என்பதற்குப் பொருந்தின பொருளாகும்.

*ஏகே முக்$_2$யாந்யகேவலா:*

என்கிற கோசத்தின்படி ப்ரதாநன் என்கிற அர்த்தத்தையே ஏக சப்தத்துக்கு இங்கு கொள்ளக் கடவது என்றும் காட்டியருளுகிறார். மேலும், **சோழமன்னன் ஒருவனே அத்விதீயனாக இப்போது உளன்* என்பதற்கு எப்படி *அவனே எல்லா மன்னர்களுக்கும் தலைவன்; அவனுக்கு ஸமாநமாகவும், அவனைக் காட்டிலும் உயர்ந்தவனாகவும் இப்போது மற்றொரு மன்னன் இல்லை* என்கிற பொருளையே கொள்கிறோமோ அப்படியே இங்கும் கொள்வது** என்று இவ்வர்த்தத்தை மூதலித்துக் கொடுத்தார்.

யத$_2$ா சோளந்ருப: ஸம்ராட$_3$த்$_3$வீதியோSத்$_3$ய பூ$_4$தலே |
இதி தத்துல்யந்ருபதி - நிவாரணபரம் வச: ||
ந து தத்$_3$ப்$_4$ருத்ய - தத்புத்ரகளத்ராதி$_3$ நிஷேத$_4$கம் |
தத$_2$ா சுராமுர - நர - ப்$_3$ரஹ்ம - ப்$_3$ரஹ்மாண்ட கோடய: ||
க்லேச கர்ம விபாகாத்$_3$யை ரஸப்ருஷ்டஸ்யாகி$_2$லேசிது: |
ஜ்ஞாநாதி$_3$ஷாட்$_3$கு$_3$ண்ய நிதே$_4$ரசிந்த்யவிப$_4$வஸ்ய தா: ||
விஷ்ணோர் விபூ$_4$தி மஹிம ஸமுத்$_3$ர த்$_3$ரப்ஸ விப்ருஷ: ||

என்னும் ச்லோகங்களினால் *அநந்தகோடி ப்ரம்மாண்டங்களும் அதற்கு உட்பட்ட ஸகல தேவாதி சேதநர்களும் எம்பெருமானுடைய விபூதியில் அடங்கியவை; ஸ்வதந்த்ரரமான மற்றொரு வஸ்து இல்லை* என்று நிரூபித்து

ப்ரஹ்மாத்ம நாத்மலாபோயம் ப்ரபஞ்சச் சித$_3$சிந்மய: |
இதி ப்ரமீயதே ப்$_3$ராஹ்மீ விபூ$_4$திர் ந நிஷித்$_4$யதே ||

என்று *அத்விதீய ச்ருதியினால் புருஷோத்தமனுடைய விபூதிக்கு ஒருவிதமான இடரும் இல்லை* என்பதைக் காட்டியருளுகிறார். இவ்வண்ணம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்துக்கு அடிப்படையான கொள்கைகளை ஸம்வித்ஸித்தியில் நிலைநாட்டுகிறார்.

எண்பெருக்குஅந்நலத்து *
ஒண்பொருள் ஈறில *
வண்புகழ் நாரணன் *
திண்கழலசேரே (1-2-10)

*கணக்கறுநலத்தனன் அந்தமிலாதியம்பகவன்* (1-3-5)

*அமைவுடைஅமரரும் யாவையும்யாவரும்தானும்
அமைவுடை நாரணன்மாயையை அறிபவர்யாரே? (1-3-3)

*காராயின காள நன்மேனியினன் நாராயணன் நங்கள் பிரானவனே*
(9-3-1)

*நீராய்நிலனாய்த் தீயாய்க்காலாய்நெடுவானாய்*(6-9-1)
*ஒத்தார்மிக்காரை இலையாய மாமாயா!*(2-3-2)

இத்யாதியான ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளை உட்கொண்டு *ஏகமேவாத்₃விதீயம்* என்கிற ஶ்ருதி வசநத்துக்குப் பொருத்தமான பொருளை விளக்கியருளுகிறார்.

வேதம் தமிழ் செய்த மாறனாகையாலே அவருடைய திவ்யஸூக்திகள் ஸம்ஸ்க்ருத வேத வாக்யார்த்தங்களை உட்கொண்ட த்ராவிட வேதவாக்யங்களாம். ஆகவே அவர் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு ஸம்ஸ்க்ருத வேதவாக்யங்களின் பொருளை நிர்ணயிப்பதில் குறையொன்றுமில்லை என்று தெளிந்திடுக.

## முடிவுரை

இச்சிறு கட்டுரையில் மூன்று ஸித்திகளிலும் உள்ள முக்யமான சில விஷயங்களைக் கூடிய வரையில் விளக்கி இருக்கிறேன். நம் தர்ஶநத்துக்கு வேர்ப்பற்றான பரமாசார்யருடைய ஜ்ஞாநத்தின் பெருமையை இத்தால் உணரலாம். இவர் க்ரந்தங்களை அருளிச்செய்வதன் மூலம் நம்முடைய ஸித்தாந்தத்திற்குச் செய்திருக்கும் மஹோபகாரங்களையும் ஓரளவு இதில் குறிப்பிட்டிருக்கிறேன். எனவே இவருடைய ஜ்ஞாநப் பெருமையை உணர்ந்து உகக்கவும், இவர் செய்தருளிய உபகாரங்களை அறிந்து இவர் திறத்து க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் செய்து உஜ்ஜீவநத்தைப் பெறவும் இந்தக் கட்டுரை ஒருவாறு உபயோகப்படும் என்று நம்புகிறேன்.

http://acharya.org